4. அறிவிப்பு

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் அட்டவணையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். 2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அவை உரிமைக் குழு ஆகியவற்றிற்கான தேர்தல் அட்டவணையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத் தாள்களை.... (குறுக்கீடுகள்)

110-வது விதியின்கீழ் விவாதம் கூடாது என்பது விதி. விவாதிக்க நான் அனுமதிக்கவில்லை. விதிப்படி விவாதிக்க நான் அனுமதிக்கவில்லை. ஆகவே, தாங்கள் பேசியது அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத்தாள்களை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள், திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

நண்பகல் 12-00

வேட்புத்தாள்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள், திங்கட்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள், புதன்கிழமை குழுக்களுக்கான தேர்தல் நடைபெறும். (குறுக்கீடுகள்)

5. கவன ஈர்ப்பு

(அ) அரூர் தொகுதி, அங்குத்தி சுனையின் குறுக்கே அணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கிருஷ்ணமூர்த்தி